# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 17.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 11983/SCIC/2019**

Thiru M.S.Niranjhan .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

The Public Information Officer
(Enforcement Cell),
Chennai Metropolitan Development Authority,
Thalamuthu Natarajan Building,
No.1, Gandhi Irwin Road,
Egmore, Chennai-600 008. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 23.09.2019 தேதியிட்டு அனுப்பிய மனுவில், பிரசன்னராவ் என்பவரது 09.05.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு, CMDA பொதுத் தகவல் அலுவலரின் கடித எண்.G/PIO/6225/2018, நாள் 18.09.2019 என்ற பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 09.05.2018, 27.03.2018, 01.03.2018, 18.09.2019 ஆகிய தேதிகளின்படி பிளாட் எண்.1A-க்கு எதிராக CMDA சட்ட நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா என்று 4 இனங்களில் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 01.10.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 19(1)-ன் கீழ் 15.10.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 18.09.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் 26.11.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து அவற்றைத் தனக்குப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே 25.07.2020-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு கடைசி வாய்ப்பாக 10.08.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 15.08.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் மனுதாரர் 12.08.2020 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர் எந்த தகவலும் வழங்கவில்லை என்று தெரிவித்து ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

4. அதன்பின்னர், வழக்கு 05.11.2020 அன்று விசாரிக்கப்பட்டது. அன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். அத்தகவல்கள் முழுமையற்று இருந்ததால், விடுபட்ட தகவல்களை இணைத்து ஒரு வாரத்திற்குள் மனுதாரருக்கு உரிய தகவல் வழங்க வேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டு, வழக்கு 17.11.2020-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

5. அதன்பின்னர், வழக்கு 17.11.2020-ல் விசாரிக்கப்பட்டது. விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் கோரிக்கைகளுக்கு கடித எண்.G/PIO/6225/2018, நாள் 16.11.2020 என்ற கடிதத்தின் மூலம் அனைத்துத் தகவல்களையும் வழங்கிவிட்டதாகத் தெரிவித்து, அவ்வாறு அனுப்பப்பட்ட ஆவணங்களின் நகல்களை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். மனுதாரரும் தனது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் ஆணையத்திடம் தெரிவித்தார். **ஆகவே இவ்வழக்கின் விசாரணையை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 11983/SCIC/2019**

பெறுநர்
பொது அதிகார அமைப்பு
The Public Information Officer (Enforcement Cell),
Chennai Metropolitan Development Authority,
Thalamuthu Natarajan Building,
No.1, Gandhi Irwin Road,
Egmore, Chennai-600 008.

மனுதாரர்

Thiru M.S.Niranjhan,
Flat No.1A, Vishwakamal Apartments,
62-245, R.K.Mutt Road,
Mylapore, Chennai-600 004.
*PR/PS 18/11/2020*

BY RPAD


CHENNAI METROPOLITAN DEVELOPMENT AUTHORITY
Thalamuthu Natarajan Building, No.1, Gandhi Irwin Road, Egmore,
Chennai - 600 008
Phone : 28414855 Fax: 91-044-28548416
E-mail: mscmda@vsnl.com
Web site: www.cmdachennai.gov.in


**Letter No.G/PIO/6225/2018** **Dated: 16.11.2020**

To

**Thiru M.S. Niranjhan**
**S/o. M.A. Srinivsan**
**Flat No.1A (Owner) Vishvakamal Apartments**
**62/245, R.K. Mutt Road**
**Mylapore, Chennai 600 004**

Sir,

Sub: CMDA -G/PIO–Information requested under RTI Act, 2005-Information furnished under RTI act 2005 – Appeal petition – Reply furnished - Reg.

Ref:
1. Your RTI petition dated 09.05.2018 received on 15.05.2018
2. CMDA Lr.No.G/PIO/212/2016 dated 14.6.2018 addressed to you
3. Your Appeal petition dated 18.07.2018 received on 20.07.2018
4. This office letter even No. dated 21.8.2018
5. Tamilnadu State Information Commission case No.SA/9124/D/2018 dated 22.8.2018 and hearing conducted on 5.9.2019.
6. This office letter even No. dated 18.9.2019
7. Your RTI petition dated 23.9.2019 received on 25.9.2019
8. Orders of SA11983/Maa.T.T.A./2019 dated 25.7.2020 from the Commissioner, Tamilnadu State Information Commission, Chennai -18
9. This office e-mail dated 7.7.2020 addressed to the TNSIC, Chennai-600 018.
10. This office letter even No. dated 7.8.2020 addressed to the TNSIC, Chennai-600 018.
11. Second Appeal hearing before the Tamil Nadu State Information Commission on 5.11.2020.

****

With reference to the above and the orders of the Tamil Nadu State Information Commission dated 5.11.2020 in the reference 11th cited, the following informations are furnished.

| Sl. No | Question | Reply |
|---|---|---|
| 1 | Is/Was there legal action by CMDA pending against Flat 1A as at 9.5.2018. | No. |
| 2 | Is/Was there legal action by CMDA pending against Flat 1A as at 27.03.2018 | No |
| 3 | Is/Was there legal action by CMDA pending against Flat 1A as at 01.03.2018 | No |
| 4 | Is/Was there legal action by CMDA pending against Flat 1A as at 18.09.2019 | No |

Yours faithfully,

APPELLANT AUTHORITY /
SENIOR LAW OFFICER, LEGAL CELL

16/11

Copy to:
The Commissioner
Tamil Nadu Information commission
No.2, Theyagaraya Salai
Teynampet
Chennai 600 018